# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

## அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 9

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 20

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. செயற்கை வேதிப் பயன்பாட்டால்
   1. காடுகள் வளமாகின்றன.
   2. மண்ணின் வளம் குறைகிறது.
   3. உடல்நலம் பேணப்படுகிறது.
   4. நல்ல உணவுகள் கிடைக்கின்றன.

2. செய்வித்தாள் என்பதன் தன்வினை
   1. செய்கிறாள்
   2. செய்வாள்
   3. செய்தாள்
   4. செய்யும்

3. பிறருக்கு உதவி செய்யும் ஆர்வத்தைத் தூண்டுவது
   1. பொறாமை
   2. சினம்
   3. பொருள்
   4. அன்பு

4. சொல்லியத்தில் பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது
   1. புணர்ச்சி
   2. உரிச்சொல்
   3. வேற்றுமை
   4. யாப்பு

5. கருத்துப் பரிமாற்ற ஊடகமாக இருப்பது
   1. சூழல்
   2. மொழி
   3. இயற்கை
   4. பண்பு

6. ஞாலம் என்பதன் ஒத்தபொருட் சொல்
   1. கடல்
   2. வானம்
   3. உலகம்
   4. காற்று

7. இயற்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு
   1. பொன்
   2. பேப்பர்
   3. வாக்கியம்
   4. குசினி

8. உலகமயமாதலின் முழுப்பயனையும் பெறுவதற்கு நாம் செய்ய வேண்டியது
   1. நாடுகளுடன் போரிடுதல்
   2. வளங்களைச் சுரண்டுதல்
   3. இயற்கையோடு இணைந்து வாழ்தல்
   4. பொருள்களின் தரத்தைக் குறைத்தல்

9. ஆடற்கலைபற்றிய செய்திகள் கூறப்படும் நூல்களுள் ஒன்று
   1. சிலப்பதிகாரம்
   2. புறநானூறு
   3. நன்னூல்
   4. திருக்குறள்

10. ஈழத்தைத் தனித்தனி மாகாணங்களாகப் பிரித்தோர்
   1. ஒல்லாந்தர்
   2. பிரித்தானியர்
   3. முகமதியர்
   4. பிரான்சியர்

11. தொடக்கத்தில் கணினிப் பயன்பாட்டில் பயன்படுத்தப்பட்ட மொழி
   1. தமிழ்
   2. கிரேக்கம்
   3. ஆங்கிலம்
   4. அரபு

12. க், ச், ட் இவற்றுக்கான மெய் இனவெழுத்துகள்
   1. த், ப், ற்
   2. ந், ம், ன்
   3. ய், ர், ல்
   4. ங், ஞ், ண்

13. பணிவு இல்லாதோர் மனத்தில் வளர்வது
   1. அன்பு
   2. செருக்கு
   3. உறவு
   4. நட்பு

14. செயப்படுபொருள் குன்றாவினை
   1. ஓடினான்
   2. வெட்டினான்
   3. அழுதான்
   4. நடந்தான்

15. யாப்பு இலக்கணங்களுக்கு அமைய எழுதப்படுவது
   1. புதுக்கவிதை
   2. சிறுகதை
   3. புதினம்
   4. மரபுக்கவிதை

16. பறம்பு என்ற மலைப்பகுதியை ஆண்ட மன்னன்
   1. சேரன் செங்குட்டுவன்
   2. அதியமான்
   3. பாரி
   4. பாண்டியன்

17. உணர்ச்சிகளை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் நிறுத்தற்குறி
   1. அடைப்புக்குறி
   2. அரைப்புள்ளி
   3. காற்புள்ளி
   4. மெய்ப்பாட்டுக்குறி

18. தெளிவு என்ற பொருளைத் தரும் உவமைத்தொடர்
   1. காட்டுத் தீ போல
   2. பாம்பும் கீரியும் போல
   3. குன்றின் மேலிட்ட விளக்குப் போல
   4. நகமும் சதையும் போல

19. ஐந்திலக்கணங்களுள் ஒன்று
   1. பெயர்
   2. வினை
   3. இடை
   4. சொல்

20. க, இய, இயர் போன்ற விகுதி பெற்று வரும் வினைமுற்று
   1. ஏவல்
   2. வியங்கோள்
   3. குறிப்புவினை
   4. தெரிநிலைவினை

21. கண் + இமை என்பதைப் புணர்த்தி எழுதினால்
   1. கணிமை
   2. கண்ணிமை
   3. கண்னிமை
   4. கனிமை

22. நாட்டுப்புற இலக்கிய வடிவங்களுள் ஒன்று
   1. திரைப்படம்
   2. குறும்படம்
   3. பழமொழி
   4. சொற்பொழிவு

23. இன்சொல் பேசுதல் நனிசிறந்த பழக்கமாகும். இதில் நனி என்பது
   1. இடைச்சொல்
   2. வினைச்சொல்
   3. உரிச்சொல்
   4. பெயர்ச்சொல்

24. தமிழரது பண்பாட்டு வரலாற்றை எடுத்துக் கூறும் இலக்கியம்
   1. வளையாபதி
   2. குண்டலகேசி
   3. சீவகசிந்தாமணி
   4. சிலப்பதிகாரம்

25. எடுத்தனர் என்ற பகுசொல்லில் வந்துள்ள இடைநிலை
   1. ன்
   2. இன்
   3. ற்
   4. த்

26. ஒருகை பார்த்தல் என்னும் மரபுத்தொடரின் பொருள்
   1. தாழ்ந்து நிற்றல்
   2. வெல்ல முயற்சித்தல்
   3. எதிர்த்துப் பேசுதல்
   4. மிக மகிழ்தல்

27. சைவவழிபாட்டைப் போற்றிய இலக்கியங்கள்
   1. செய்யுள்கள்
   2. தொன்மங்கள்
   3. திருமுறைகள்
   4. தொல்வரலாறு

28. எண்களைக் கணித்துக் கூறுவோர்
   1. ஆய்வாளர்
   2. கணியர்
   3. அறிவியலாளர்
   4. எழுத்தாளர்

29. பாங்கன், தோழன், கூட்டாளி ஆகிய சொற்களைக் குறிக்கும் ஒரு சொல்
   1. எழுத்தாளன்
   2. பாவலன்
   3. மன்னன்
   4. நண்பன்

30. பல்லவர்காலத்தில் போற்றப்பட்ட வாழ்வியல் முறை
   1. அறநெறி
   2. போர்நெறி
   3. இறைநெறி
   4. சமணநெறி

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

30 x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மாந்த விழுமியப் பண்புகளுள் இரண்டை எழுதுக.

2. விடாமுயற்சி என்ற நாடகம் கூறும் செய்தி என்ன?

3. பல்லவர்காலத்தில் சமண, பௌத்த மதங்கள் பரவின.
இச்சொல்லியத்தில் வந்துள்ள எழுவாய், பயனிலையை எழுதுக.

எழுவாய்: ______

பயனிலை: ______

4. போர்த்துக்கேயர் ஆட்சியில் பரப்பப்பட்ட மதம் எது?

5. நெகிழிப் பயன்பாட்டால் ஏற்படும் தீங்குகளுள் ஒன்றை எழுதுக.

6. மெய் முன் உயிர் புணர்தலுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

7. செய்வினைச் சொல்லியம் ஒன்று எழுதுக.

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

1. போர்: ______________________________

______________________________

______________________________

2. பூங்கா: ______________________________

______________________________

______________________________

3. மனவுறுதி: ______________________________

______________________________

______________________________

4. விண்ணுந்து: ______________________________

______________________________

______________________________

5. தமிழின அழிப்பு: ______________________________

______________________________

______________________________

5x2 = 10 **புள்ளிகள்**

## 4 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே
ஏன் படித்தோம் என்பதையும் மறந்து விடாதே
நாட்டின் நெறி தவறி நடந்து விடாதே
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே
மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக் கூடாது - பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக் கூடாது

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

1. நாம் யாருடைய சொற்களை மீறக் கூடாதெனக் கவிஞர் கூறுகிறார்?

______________________________

2. நாம் எதை மறக்கக் கூடாது?

______________________________

3. தீயவர்களாக வளர்ந்தால் எம்மைத் தூற்றுபவர்கள் யாவர்?

______________________________

4. நாம் எதன் நெறி தவறக் கூடாது?

______________________________

5. எதில் படித்ததோடு மட்டும் நாம் இருந்து விடக் கூடாது?

______________________________

5x2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஐக்கிய இராச்சியம் - கனடா:**

1. We celebrated Thai Pongal greatly.
2. I speak in Tamil with my parents.
3. Joy and sorrow occur alternatively in life.
4. The use of mobile phones has increased today.
5. The natural disasters occurring all over the world have made us to think.

**பிரான்சு:**

1. Nous avons célébré la fête de Thai Pongal de manière spéciale.
2. Je parle en tamoul avec mes parents.
3. Dans la vie, le bonheur et la tristesse alternent.
4. Aujourd'hui, l'utilisation des téléphones portables a augmenté.
5. Les catastrophes naturelles qui se produisent partout dans le monde nous font réfléchir.

**நோர்வே:**

1. Vi feiret thaipongal stort.
2. Jeg snakker tamil med mine foreldre.
3. Glede og sorg kommer vekselvis i livet.
4. Mobil forbruket har økt i dag.
5. Verdens naturkatastrofer får oss til å tenke.

**இத்தாலி:**

1. Noi abbiamo celebrato thaiPongal in modo speciale.
2. Io parlo in Tamil con i miei genitori.
3. Nella vita gioia e dolore si alternano.
4. Oggi l'uso dei telefoni è aumentato.
5. I disastri naturali che si stanno verificando in tutto il mondo ci hanno fatto riflettere.

**நெதர்லாந்து:**

1. Wij hebben Thai Pongal erg leuk gevierd.
2. Ik spreek Tamils met mijn ouders.
3. In het leven wisselen plezier en pijn elkaar af.
4. Het gebruik van een mobiele telefoon tegenwoordig steeds meer.
5. De natuurrampen die overal ter wereld plaatsvinden, zetten ons aan het denken.

**டென்மார்க்:**

1. Vi fejrede Thai Pongal på en fantastiskmåde.
2. Jeg taler på tamilsk med mine forældre
3. I livet vil der være sorg og glæde på skift.
4. I dag er brugen af mobiltelefoner meget udbredte.
5. De mange naturkatastrofer i verden, har fået os til at tænke.

**சுவீடன்:**

1. Vi firade Thaipongal på ett storslaget sätt.
2. Jag kommer att prata tamil med mina föräldrar.
3. Lycka och sorg kommer omväxlande i livet.
4. Idag har användningen av mobiltelefoner ökat.
5. Naturkatastroferna som inträffar över hela världen har fått oss att tänka.

**பின்லாந்து:**

1. Me juhlimme Thaipongalia erikoisesti.
2. Minä puhun vanhempieni kanssa tamilia.
3. Elämässä tulee iloa ja surua vuorotellen
4. Tänäpäivinä matkapuhelinten käyttö ovat lisääntyneet.
5. Maailmassa kaikkialla tapahtuvat luonnonkatastrofit ovat saaneet meidät miettimään.

**தமிழ்:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

5x2 = 10 **புள்ளிகள்**

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. உலகமயமாதல்

2. தமிழர் ஆடற்கலை

3. தமிழின் பெருமை

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - தமிழின் தொன்மை
   - தமிழைக் கற்றல்
   - தாய்மொழி தமிழாக இருப்பதன் பெருமை

4. நான் வாழும் நாடு

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - இயற்கை வளமும் காலநிலையும்
   - மக்களும் வாழ்க்கை முறையும்
   - நாட்டின் சிறப்புகள்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

வணிக நோக்குடன் ஒரு பொருளைப் பற்றிப் பலருக்கு அறிமுகம் செய்வது விளம்பரம் என அழைக்கப்படுகிறது. விளம்பரத்துக்கான செய்தி தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்கவேண்டும். இன்று விளம்பரம் செய்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தும் முறை அதிகரித்துக் கொண்டு வருகிறது. இது ஒரு பொருளை வாங்குவோரையும் விற்போரையும் ஒன்றிணைக்கிறது. விளம்பரமானது, பல நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் முதன்மையானது, ஓர் உற்பத்திப் பொருளை மக்களின் பார்வைக்கு உடனே கொண்டு செல்வதாகும். அத்துடன் வாங்குவோர் விற்போரின் எண்ணிக்கையை அதிகரித்தல், விற்கப்படும் பொருளின் மீது வாங்குவோருக்கு ஈர்ப்பை உண்டாக்குதல், விற்பனையைப் பெருக்குதல் போன்றனவும் இதற்கான நோக்கங்களாக அமைகின்றன. விளம்பரம் எழுதுவோரிடம் கற்பனை, எழுத்து, படைப்பாற்றல் போன்ற திறன்கள் இருந்தால் மட்டுமே இந்நோக்கங்கள் நிறைவேறும். இன்று தமிழ் ஊடகங்களில் வெளியாகும் விளம்பரங்கள் எழுத்துப் பிழைகளுடன் எழுதப்படுகின்றன. பிறமொழிச் சொற்களின் கலப்பும் காணப்படுகின்றன. ஊடகங்கள் இவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

1. விளம்பரத்துக்கான செய்தி எப்படி இருக்கவேண்டும்?

2. விளம்பரம் என்றால் என்ன?

3. விளம்பரங்களை எழுதுவோரிடம் இருக்க வேண்டிய திறன்களுள் இரண்டை எழுதுக.

4. விளம்பரங்களின் நோக்கங்களுள் முதன்மையானது எது?

5. இன்று விளம்பரம் செய்வதற்காக எவை பயன்படுத்தப்படுகின்றன?

5x2 = 10 **புள்ளிகள்**

**2. மேடைப்பேச்சை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✕ எனவும் அடையாளம் இடுக.**

## மேடைப்பேச்சு

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம்! பள்ளி மாணவர் சங்கத்தின் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு முதலில் நான் நன்றி கூறிக் கொள்ள விரும்புகிறேன். இம்மேடையில் பள்ளியின் வளர்ச்சி சார்ந்து சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மாணவப்பருவம் என்பது அழகானது. வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாதது. அதனால், மாணவர்களாகிய நாம் ஒன்றிணைந்து, பள்ளியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவோம்! தாய், தந்தைக்கு அடுத்து நாம் கடவுளாகப் போற்ற வேண்டிய ஆசிரியர்களுக்குப் பெருமை தேடித் தருவோம்! அனைவரும் என்னுடன் கைகோர்த்து நிற்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் எனது உரையை முடிக்கிறேன்.

நன்றி வணக்கம்.

1. மாணவப் பருவம் அழகானது. ( )
2. இந்த உரையை ஆற்றுபவர் பள்ளி ஆசிரியர். ( )
3. தாய், தந்தைக்கு அடுத்து நாம் உறவினர்களைப் போற்ற வேண்டும். ( )
4. ஆசிரியர்களுக்குப் பெருமை தேடித்தரவேண்டியது மாணவர் கடமை. ( )
5. இம்மேடைப் பேச்சில் பள்ளியின் வளர்ச்சி பற்றிப் பேசப்பட்டது. ( )

5x1 = 5 புள்ளிகள்

குறிப்பு:

குறிப்பு:

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |